**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி, M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 25ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 33/2025**

தரங்கம்பாடி தாலுக்கா, மாத்தூர் கிராமம், 2/86 நடுத்தெருவில் வசிக்கும் சண்முகம் குமாரர் 54 வயதுள்ள முத்துக்கருப்பன்.

..மனுதாரர்/வாதி

//எதிர்//

தரங்கம்பாடி தாலுக்கா, மாத்தூர் கிராமம், நடுத்தெருவில் வசிக்கும் முகம்மது இப்ராஹிம் குமாரர் 36 வயதுள்ள நியாஸ்கான்.

..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரரால் இம்மனுவானது மனு சொத்தினை அளவீடு செய்ய ஓர் வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 14.03.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 14.03.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 01.12.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ராஜலெட்சுமி, அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 11.12.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**சொத்து விபரம்**

**A அட்டவணை**

தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில் சார்பதிவு மாத்தூர் கிராமம், நடுத்தெருவில்,
புஞ்சை புல எண்.131/12 (பழைய புல எண்: 131/10B2)
(பத்திரப்படி பழைய புல எண்: 131–10B) ல்
168 ச.மீ பூரா காலி மனை. வரைபடத்தில் ABCD பகுதி.

**<u>நான்கெல்லை:</u>**

ரோட்டுக்கு மேற்கு, பிரதிவாதி சொத்துக்கு வடக்கு, வாதி இதர புஞ்சைக்கு கிழக்கு, புல எண்.131/11க்கு தெற்கு.

**<u>B அட்டவணை</u>**

தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார்கோவில் சார்பதிவு மாத்தூர் கிராமம், நடுத்தெருவில்,

புஞ்சை புல எண்.131/12 (பழைய புல எண்: 131/10B2)

(பத்திரப்படி பழைய புல எண்: 131–10B) ல்

தென்புறமாக கீழ்மேல் 22.6 மீ நீளம் தென்வடல் 3 மீ அகலம் உள்ள 67.8 ச.மீட்டருக்கு சமமான 730 சதுர அடி மனை, வரைபடத்தில் CDEF பகுதி.

**<u>நான்கெல்லை:</u>**

ரோட்டுக்கு மேற்கு, பிரதிவாதி சொத்துக்கு வடக்கு, வாதி இதர புஞ்சைக்கு கிழக்கு, புல எண்.131/12க்கு தெற்கு.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2025.12.11 16:38:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**